[1993 மார்ச் 17

வினா எண். 108. திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

108—

எட்டயபுரம் பாரதி கூட்டுறவு ஆலையிலுள்ள விசைத்தறிகள்.

* 10313—திருமதி ரெ. சியாமளா :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரத்தில் உள்ள பாரதி கூட்டுறவு மில்லில் விசைத்தறிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அதிகரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பாரதி கூட்டுறவு நூற்பாலை 12,500 கதிர்களுடன் செயல்பட்டு வருகிறது. எனவே இந்த ஆலையில் விசைத் தறிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு கருத்துரு எதுவும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திருமதி. ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவிற்கு இடமில்லை என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். விசைத்தறிக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட்டால் தக்க பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 109, திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை.

வினா எண். 110, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை.

வினா எண். 111. திருமதி. கே. எம். கலைச்செல்வி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.